புதுச்சேரி அரசு
மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை (இயந்திரப் பிரிவு)
மீன்பிடித் துறைமுக வளாகம், தேங்காய்த்திட்டு, புதுச்சேரி- 605 004.

எண். 1917/மீ.வ/வா.எ./2019-20 146

தேதி: 25.04.2019
தொலைபேசி: 2357761, 2357708

## மீனவர்களுக்கான வானிலை எச்சரிக்கை

புதுவைப் பகுதி மீனவர்களுக்கு தெரிவிப்பது யாதெனில், குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை ஒன்று நிலநடுக்கோடு இந்தியப் பெருங்கடல் மற்றும் அதனைச் சார்ந்த தென்மேற்கு வங்கக் கடலில் ஸ்ரீலங்கா தென்கிழக்கில், 25.04.2019 வாக்கில் உருவாகக் கூடும் என்று இந்திய வானிலை ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது. இதன் பொருட்டு, மீனவர்கள் கீழ்க்கண்ட கடல் பகுதிகளில் குறிப்பிட்டுள்ள நாட்களில் மீன்பிடிக்கச் செல்ல வேண்டாம் என்று எச்சரிக்கப்படுகிறது:-

| நாள் | காற்றின் வேகம் | காற்றழுத்து மண்டலம் / புயலின் நிலை | மீன்பிடிக்க செல்லக்கூடாத இடங்கள் |
|---|---|---|---|
| 25.04.2019 | மணிக்கு 30-40 கி.மீ அதிகபட்சமாக 50 கி.மீ. | சூறைக்காற்று | நிலநடுக்கோடு இந்தியப் பெருங்கடல் மற்றும் அதனைச் சார்ந்த தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதிகள் மற்றும் தெற்கு அந்தமான் கடல். |
| 26.04.2019 | மணிக்கு 40-50 கி.மீ அதிகபட்சமாக60 கி.மீ. | சூறைக்காற்று | நிலநடுக்கோடு இந்தியப் பெருங்கடல் மற்றும் அதனைச் சார்ந்த தெற்கு வங்கக்கடலின் மத்திய பகுதிகள் மற்றும் தெற்குஅந்தமான் கடல். |
| 27.04.2019 | மணிக்கு 65-75 கி.மீ அதிகபட்சமாக 85கி.மீ. | புயல் காற்று | நிலநடுக்கோடு இந்தியப் பெருங்கடல் மற்றும் அதனைச் சார்ந்த தென் மேற்கு வங்கக்கடல். |
| 28.04.2019 | மணிக்கு 80-90 கி.மீ அதிகபட்சமாக100 கி.மீ. | புயல் காற்று | நிலநடுக்கோடு இந்தியப் பெருங்கடல் மற்றும் அதனைச் சார்ந்த தென் மேற்கு வங்கக்கடல் மற்றும் ஸ்ரீலங்காவின் கடல் பகுதிகள். |

எனவே, கடலில் மீன்பிடிக்கும் மீனவர்கள் 25.04.2019 அன்றே கரைக்குத் திரும்புமாறும், மேலும் 25.04.2019 முதல் தென்மேற்கு வங்கக்கடல் மற்றும் அதனைச் சார்ந்த பூமத்தியரேகை இந்தியப் பெருங்கடல் மற்றும் தமிழ்நாடு கடல் பகுதிகளுக்கு மீன்பிடிக்க கடலுக்குச் செல்ல வேண்டாம் எனவும் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

...2/-

மேலும், மீனவர்கள் தங்கள் மீன்பிடிபடகுகள்/கலன்கள் மற்றும் மீன்பிடி வலைகள் மற்றும் பிற உடமைகளை பாதுகாப்பான இடத்தில் வைத்திருக்குமாறும் குறிப்பாக பணிக்கூடங்கள் (Work Shelter) அமைக்கப்பட்டுள்ள மீனவ கிராமங்களில் மீன்பிடி சாதனங்களை வைக்குமாறும் அறிவுறுத்தப்படுகிறது.

25/04/19
(ச. தனசேகரன்)
துணை இயக்குநர் (இயந்திரபிரிவு)